# 20 புன்னகை வேண்டும்



ஒழுக்கம் சிறந்தது பாப்பா - உன்
உயிரின் உயர்ந்தது பாப்பா
நன்னெறி சேர்த்திட வேண்டும் - பாப்பா
நல்லோரைச் சார்ந்திட வேண்டும்

பொய் கொலை களவு வஞ்சம் - உடன்
போக்கிடு வாயுன் நெஞ்சம்
அன்பே இன்ப ஊற்று - இதய
ஆசையுடனது போற்று

வாழ்வைக் கெடுப்பது கோபம் - உயிர்
வதை செய்வது பாவம்
பாபப் பலன்பரி நாசம் - ஊர்
பேசுவதும்பரி காசம்

இன்சொல் பேசுவாய் நாளும் - என்றும்
இவ்வுல குன்பெயர் வாழும்
புன்னகை பூத்திட வேண்டும் - பாப்பா
எண்ணிய பேறெய்தி வாழ்வாய்

- பண்டிதர் க. வீரகத்தி

## அகராதிப் பயன்பாடு




நன்னெறி -
நெஞ்சம் -
இன்சொல் -
புன்னகை -
வெட்கம் -
ஊற்று -

பயிற்சி

## 20.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. உயிரிலும் சிறப்பானது எது எனக் கவிஞர் கூறுகின்றார்?
2. நாம் எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்?
3. இப்பாடலை எழுதியவர் யார்?
4. இப்பாடலில் பெயராகவும் வினையாகவும் வரும் ஒரு சொல்லைக் குறிப்பிடுக.
5. இப்பாடலின் மூலம் நாம் எவற்றைத் தவிர்க்க வேண்டும் எனக் கவிஞர் கூறுகின்றார்?

**20.2 பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களைப் பாடலிலிருந்து தெரிவுசெய்து எழுதுவோம்.**

i. நிராசை - ii. வன்சொல் - iii. தாழ்ந்தது -

iv. தீயோரை - v. சத்தியம் -

**20.3 சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுவோம்.**

i. இ. ம. வ - ........................ vi. இ. போ.ச - ..........................

ii. இ. பெ. கூ - ........................ vii. இ. மி. ச - ..........................

iii. இ. ரூ. கூ - ........................ viii. பா. அ.ச - ..........................

iv. த. பெ. இ - ........................ ix. ம. ப. பா - ..........................

v. ந. ச - ........................ x. அ. ப - ..........................

**20.4 ஒத்தகருத்துச் சொற்களைத் தெரிவுசெய்து எழுதுவோம்.**




1. களிறு, கரி, வேழம்
2. பரவை, ஆழி, சமுத்திரம்
3. ஞானம், புத்தி, விவேகம்
4. ஆவல், விருப்பம், அவா

### தொடர்வாக்கியம்

ஒன்றிற்கு மேற்பட்ட வாக்கியத்தொடர்களால் அமைந்த வாக்கியங்கள் ஆகும்.

- ஒரு எழுவாயையும் அதன் பல செயல்களையும் கொண்டவையாக அல்லது
- பல எழுவாய்களையும் அவற்றின் ஒரு செயலையும் கொண்டவையாக அல்லது
- பல எழுவாய்களையும் அவற்றில் பல செயல்களையும் கொண்டவையாக அமையலாம்.

உதாரணம்: தமிழரசி போட்டியில் பங்கேற்றாள். வெற்றிபெற்றாள்.
தமிழரசி போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்றாள்.

## 20.5 பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியங் களாக்கி எழுதுவோம்.

1. விளையாட்டு வீரன் மைதானத்திற்குச் சென்றான்.
   வீரன் மைதானத்தில் விளையாடினான். ..........................................................
2. பூனை பாலைக் குடித்தது.
   பூனையின் தாகமும் களைப்பும் நீங்கியது. ...................................................
3. மாமா தோட்டத்திற்குச் சென்றார்.
   மாமா காய்கறிகளைப் பறித்தார். .....................................................................
4. நஸீர் குளக்கரைக்குச் சென்றான்.
   நஸீர் தூண்டிலில் மீன் பிடித்தான். ..............................................................
5. மேரி சித்திரம் வரைந்தாள்.
   மேரி நிறம் தீட்டினாள். ..................................................................................



## 20.6 'அ' பகுதியை வாசித்து 'ஆ' பகுதியில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்போம்.

| பகுதி (அ) | பகுதி (ஆ) |
|---|---|
| நிறங்கள் பல கொண்டது. மனதைக் கொள்ளை கொண்டது. நறுமணம் வீசியே தேனீயை தம் வசப்படுத்துமே பாரீர். | இந்தப் பாடல் பூக்கள் பற்றியது என்றால் நறுமணம் என்ற சொல்லின் கீழ்க் கோடிடுக. அவ்வாறின்றி இங்கு கூறப்பட்டது உணவு பற்றியது என்றால் மனதை என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக. |
| பகலவன் வருகையால் பொழுது புலர்ந்தது. பூக்கள் மலர்ந்தன. பறவைகள் இசைபாட நாமும் கண் விழித்தோம். | இந்தப் பாடல் காலைப்பொழுது பற்றியது என்றால் பகலவன் என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக. அவ்வாறின்றி இங்கு கூறப்பட்டது நண்பகலுடன் தொடர்புடையதாயின் பறவைகள் எனும் சொல்லின் கீழ்க் கோடிடுக. |
| வெள்ளை நிறக்குட்டி தான் காலடியில் வந்த துவே தாயின் பாலைக் குடித்ததுமே துள்ளித் துள்ளி ஓடுதே. | இந்தப் பாடல் ஒரு பிள்ளையைப் பற்றியது என்றால் வெள்ளை என்ற சொல்லின் கீழ்க் கோடிடுக. அவ்வாறின்றி பசுக் கன்றுடன் தொடர்புடையதாயின் துள்ளித் துள்ளி என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக. |

## 20.7 பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோம்.

| | | | |
|---|---|---|---|
| கப்பம் | நடத்துநர் | விகடகவி | |
| வைரவிழா | தீர்க்கதரிசி | கைதி | அந்தப்புரம் |
| அடிமை | அணிந்துரை | தீர்ப்பு | |

i. அறுவதாவது ஆண்டிலே கொண்டாடப்படும் விழா ..........................

ii. சிறைத் தண்டனை பெற்றவன் ..........................

iii. பகை அரசருக்குக் கொடுக்கப்படும் காணிக்கை ..........................

iv. பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் ..........................

v. சுதந்திரமற்று வாழ்பவன் ..........................

vi. நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவர் ..........................

vii. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை ..........................

viii. விகடமாகவும் பரிகாசமாகவும் பேசுபவன் ..........................

ix. விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது ..........................

x. அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் ..........................

## 20.8 கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு 'அடைமொழி களை' வைத்து மீண்டும் எழுதுவோம்

உ + ம் :- கிளி பழத்தைக் கொத்தியது.

<u>பச்சைக்</u> கிளி <u>கனிந்த</u> பழத்தைக் கொத்தித்தின்றது.

1. தாமரை மலர்ந்தது. ..........................
2. சிறுவன் பாடலைப் பாடினான். ..........................
3. குயில் கூவும் ஓசை கேட்டது. ..........................
4. கொக்கு மீனை கொத்துகிறது. ..........................
5. சிறுமி நடனம் ஆடுகின்றாள். ..........................

## 20.9 கீழே தரப்பட்டுள்ள சொல்லில் உள்ள எழுத்துக் களைக் கொண்டு கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதுவோம்.

**பல்கலைக் கழகம்**

உதாரணம்:

நமது உணவு வேளைகளில் ஒன்று ........பகல்........

1. காய் என்பதன் எதிர்ப்பதம் .........................
2. கல்விச் சங்கம் என்பதைக் குறிக்கும் .........................
3. 'வித்தை' என்பதைக் குறிப்பது .........................
4. சினைப் பெயர்ச் சொல் .........................
5. கற்கள் என்பதன் ஒருமை .........................
6. பனுவல் ஒன்றில் இதுவும் இருக்கும் .........................
7. ஒத்த ஓசைச் சொற்கள் இரண்டு ......................... .........................
8. நாங்கள் நல்ல ......................... வழக்கமுடையவராக இருக்க வேண்டும்.

***செயற்பாடு*** 20.1

மேலே உள்ள பாடலைக் குழுவாக இணைந்து ஆசிரியரின் துணையுடன் இசையுடன் பாடி மகிழ்வதுடன் மனனமும் செய்துகொள்க.